வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA)- 2024 - 25

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10X1=10

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ---------
   அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை ஆ) ஊரில் பள்ளிக் கூடம் இல்லை
   இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை
2. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ----------
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
3. வண்டி இழுப்பது ---------
   அ) காலை ஆ) காளை இ) காழை ஈ) தளை
4. பயன் + இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----------
   அ) பயனிலா ஆ) பயன்னில்லா இ) பயன்இலா ஈ) பயன்இல்லா
5. உதித்த என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ----------
   அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய
6. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?
   அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கண்ணில் ஈ) தம்பி
7. பச்சைப் பசேல் எனற் வயலைக் காண இன்பம் தரும் பட்டுப்போன மரத்தைக் காண ---------- தரும்.
   அ) அயர்வு ஆ) கனவு இ) துன்பம் ஈ) சோர்வு
8. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------
   அ) மூச்சு + அடக்கி ஆ) மூச் + அடக்கி இ) மூச் + சடக்கி ஈ) மூச்சை + அடக்கி
9. என் வீடு -------- உள்ளது.
   அ) அவை ஆ) அது இ) அங்கே ஈ) எவை
10. கிடைக்கும் பொருள்களின் -----------க் கூட்டி புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.
    அ) அளவை ஆ) மதிப்பை இ) எண்ணிக்கையை ஈ) எடையை

பகுதி – II

பிரிவு – I

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4x2=8

11. போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
12. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
13. வணிகம் என்றால் என்ன?
14. 'கண்மணியே கண்ணுறங்கு' பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
15. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
16. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும் ?

பிரிவு – II

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5x2=10

17. இன எழுத்துகள் என்றால் என்ன?
18. மயங்கொலி எழுத்துகள் யாவை?
19. கலைச்சொல் தருக.
    அ) Welcome ஆ) Tiffin



www.Padasalai.Net

20. அகவினா, புறவினா – வேறுபாடு யாது?

21. மாணவனாகிய உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

22. இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுக.

[illegible] தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்

23. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுக.

அ) நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)

ஆ) நாம் உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும். (இயற்கை)

## பகுதி – III

IV. அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

24. 'வெள்ளத்து' – எனத் தொடங்கும் திருக்குறள்.

25. அ) 'மன்னனும்' – எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) 'பாயும் புயல்' எனத் தொடங்கும் கடலோடு விளையாடு பாடலை எழுதுக.

## பகுதி – IV

V. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி. 3x3=9

26. காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

27. சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக.

28. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

29. நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனிதர்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று. கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகமாகும். சான்றாக கல் என்பது விற்பனைப் பொருளன்று. ஆனால், அதனைச் செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.

வினாக்கள்:

1. சிலை செதுக்கும் போது உதிரும் கல்தூளை -------- மாற்றலாம்.
2. மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன?
3. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

## பகுதி – V

1x6=6

31. அ) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – இளமைக் காலம் – கல்விப்பணி – நிறைவேற்றிய திட்டங்கள் – முடிவுரை.

## பகுதி – VI

VI. விரிவாக விடையளிக்கவும். 2x6=12

32. அ) காணும் பொங்கல் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது?

(அல்லது)

ஆ) வணிகப் பொருள்கள் தற்காலத்தில் எவ்வாறெல்லாம் மக்களை வந்தடைகின்றன?

33. அ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

www.Padasalai.Net